பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 04 2026 THURSDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) மேற்குவங்க மாநிலத்தில் முதல்கட்டமாக 152 சட்டப்பேரவை தொகுதிகளிலும், தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

2) ஆன்லைன் விளையாட்டுகளுக்கான விதிகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3) இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அடுத்த வாரம் கையெழுத்தாகும் என்று நியூஸிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோஃபர் லக்சன் அறிவித்துள்ளார்.

4) அமெரிக்காவும் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை மீறியதால், Hormuz நீரிணையை திறக்க முடியாது என்று ஈரான் அறிவித்துள்ளது.

5) ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 40 ரன் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

>>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

3 கோடியே 60 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

16 மாவட்டங்களுக்கு உட்பட்ட இத்தொகுதிகளில் 44 ஆயிரத்து 376 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில், 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

தேர்தலை சுமுகமாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பணியில் துணை ராணுவப்படையினர் மற்றும் மாநில காவல்துறையினரைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, தமிழகத்தில் 234 சட்டப்பேரவை தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

234 தொகுதிகளில் 5 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இத்தேர்தலில் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் 325 வாக்குச்சாவடிகள் பெண் அதிகாரிகளால் மட்டும் கையாளப்படுகிறது.

வாக்குச்சாவடிகளில், வாக்காளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் செல்ஃபோன்களை வாங்கி வைப்பதற்கென, பிரத்யேக வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஆதார் அட்டை, PAN அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகம், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அடையாள அட்டை, ஓய்வூதிய ஆவணங்கள், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்ட அட்டை, தொழிலாளர் நலத்துறை வழங்கிய காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டை போன்றவற்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை வைத்திருந்த போதிலும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் வாக்களிக்க முடியாது என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது

>>>>>><<<<<

மேற்குவங்கத்தில் இரண்டாவது கட்டமாக, வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 142 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா நேற்று Dum Dum, Habra மற்றும் Saptagram தொகுதிகளில் வாக்கு சேகரித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, Amdanga, Haripal தொகுதிகளில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

>>>>>><<<<<

பிரேஸிலில் நடைபெற்ற பால் பொருட்களுக்கான சர்வதேச போட்டியில், இந்தியா சிறப்பான இடத்தை பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இப்போட்டியில் இந்தியா ஒரு சூப்பர் தங்கம், இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை இந்திய தயாரிப்புகள் வென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றிகள் மூலம், உலக அளவில் இந்தியாவின் பால்வளத்துறை வலுப்படுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

நாட்டின் ஜவுளித்துறை ஏற்றுமதி கடந்த நிதியாண்டில், இரண்டு புள்ளி ஒரு சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கைவினைப் பொருட்கள் உட்பட ஜவுளிப் பொருட்கள், 3 லட்சத்து 16ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆயத்த ஆடைகள் துறை பெரும்பங்களிப்பு செய்துள்ளதாகவும், ஒரு லட்சத்து 39 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<

வடக்கு பிராந்திய வேளாண் மாநாடு, நாளை லக்னோவில் நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில், மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், இம்மாநாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார்.

விவசாயிகள் நலன், உற்பத்தி மேம்பாடு, வேளாண் துறையில் மின்னணு பயன்பாடு ஆகியவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், வேளாண் கடன், விவசாய கடன் அட்டை, வேளாண் உள்கட்டமைப்பு நிதி, உர மேலாண்மை, சந்தை சீர்திருத்தங்கள் ஆகியவை குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>>><<<<<

ஆன்லைன் விளையாட்டுகளுக்கான விதிகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இதற்கான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

இது, அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

குஜராத் மாநிலம், Valsad மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள், Kaprada மருத்துவமனையில் சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Virkshetra என்ற இடத்தின் அருகே சுமார் 28 பேருடன் சென்று கொண்டிருந்த வேன், கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலம், சுல்தான்பூரில் Purvanchal விரைவுச் சாலையில் போர்க்காலத்தின் போது அவசர பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் விமானங்களை தரையிறக்கி, விமானப்படை சோதனை நடத்தியது.

போர்விமானங்களான Jaguar, Sukhoi, Miraj மற்றும் தேஜஸ் விமானங்கள், அச்சாலையில் தரையிறக்கி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<

தலைநகர் தில்லியில் மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் இல்லாத வாகனங்களுக்கு எரிபொருள் வழங்க மாநில அரசு தடை விதித்துள்ளது.

இதுகுறித்து தில்லி அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், செல்லத்தக்க மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் உள்ள வாகன உரிமையாளர்களுக்கு மட்டுமே பெட்ரோல், டீசல் ஆகியவற்றை வழங்க பெட்ரோல் நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாசு கட்டுப்பாட்டை திறம்பட செயல்படுத்துவதற்காகவும், காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் தில்லி அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது.

>>>>>><<<<<

இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அடுத்த வாரம் கையெழுத்தாகும் என்று நியூஸிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோஃபர் லக்சன் அறிவித்துள்ளார்.

இதன்மூலம் 140 கோடி நுகர்வோரைக் கொண்ட இந்திய சந்தையின் மூலம், நியூஸிலாந்து ஏற்றுமதியாளர்கள் பயனடைவார்கள் என்று நியூஸிலாந்து பிரதமர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

அமெரிக்காவும் இஸ்ரேலும் சண்டை நிறுத்தத்தை மீறியதால், Hormuz நீரிணையை திறக்க முடியாது என்று ஈரான் அறிவித்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ஈரான் அரசின் உயரதிகாரி திரு. Mohammed Bagher Ghalibaf, ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகையும் இந்த விதி மீறலில் அடங்கும் என்று கூறியுள்ளார்.

இது உலக பொருளாதாரத்தை பணயக் கைதியாக வைத்திருப்பதற்கு இணையானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அனைத்து வழிகளிலும் போரை தூண்டுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளுக்கு ஈரான் தயாராக உள்ள நிலையில், வாக்குறுதிகளை மீறுதல், அச்சுறுத்தல் ஆகியவை தடையாக உள்ளதாக திரு. Mohammed Bagher Ghalibaf தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, Hormuz நீரிணை பகுதியை சட்டவிரோதமாக கடந்ததாக கூறி, இரண்டு கப்பல்களை ஈரான் கடற்படை சிறை பிடித்துள்ளது.

ஈரான் அரசின் அனுமதியின்றி இந்த கப்பல்கள் பயணித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஈரான் மீதான தாக்குதல் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்த சில மணி நேரங்களில் இந்த கப்பல்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளன.

>>>>>><<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 40 ரன் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்தது.

160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய லக்னோ அணி, 18 ஓவரில் 119 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*மும்பையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.*

*இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<*

*இந்தியாவுக்கு எதிரான 3வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்க அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*>>>>>END<<<<<*